தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் &
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 20-6-2015

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விவசாய பட்டப்படிப்பு தரவரிசைப் பட்டியல் வெளியீடு

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் 2015-16ம் கல்வி ஆண்டிற்கான பி.எஸ்.சி. (விவசாயம்) உள்ளிட்ட 13 வகையான பட்டப்படிப்புகளுக்கு 15-5-2015 முதல் 13-6-2015 வரை இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க கோரி இருந்தது. கடைசி நாள் முழுமையடைந்த நிலையில் 2,340 இடங்களுக்கு 29,942 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு இன்று (20-6-2015) காலை 11.00 மணிக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) ச. மகிமைராஜா அவர்கள் வேளாண் பட்டப்படிப்புக்கான தரவரிசை பட்டியலை இணையதளத்தில் வெளியிட்டார்.

விவசாய பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்தவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் www.tnau.ac.in என்ற இணையதளத்தில தரவரிசைப் பட்டியலை பார்த்துக் கொள்ளலாம்.

இந்த தரவரிசைப் பட்டியலில் 199.75 மதிப்பெண்கள் பெற்று கன்னியாகுமரி மாவாட்டத்தைச் சேர்ந்த ராகவி அவர்கள் முதலிடத்தையும், 199.5 மதிப்பெண்களைப் பெற்று மேகலா (சேலம்), ஜெயேந்திரன் (ராமநாதபுரம்) மற்றும் ப்ரீத்தா (சேலம்) ஆகிய மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் 199.25 மதிப்பெண்களைப் பெற்று சிவபாரத்,

கந்தசாமி மற்றும் சசிக்குமார் ஆகியோர் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

ஏற்கனவே அறிவித்திருந்தது போல 27-6-2015 மற்றும் 28-6-2015 அன்று சிறப்பு கலந்தாய்வுக்காக விளையாட்டு பிரிவு ஒதுக்கீடு மற்றும் ஓய்வு பெற்ற ராணுவத்தினருக்கான ஒதுக்கீட்டுக்கான கலந்தாய்வு தொடங்கும்.மேலும் 29-6-2015 அன்று முதற்கட்ட பொது கலந்தாய்வு தொடங்கும்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


Tamil Nadu Agricultural University


Registration No.
Student name


Registration No.
Student name
Aggregate
Category
Ranking
Maths Stream
Biology Stream